செய்தி வெளியீடு எண் : 985 நாள்: 17.06.2022

# செய்தி வெளியீடு

**இன்று (17.6.2022) சென்னை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள், திருச்சிராப்பள்ளி மண்டலத்தில், பொதுப்பணித்துறை பொறியாளர்கள் மேற்கொண்டு வரும் கட்டுமானப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.**

திருச்சி மண்டலத்தில் பொதுப்பணித்துறையால், பல்வேறு கட்டடங்கள், நினைவு சின்னங்கள், மருத்துவமனை கட்டடங்கள், மணி மண்டபங்கள் போன்றவை கட்டப்பட்டு வருகிறது. இப்பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள், இன்று (17.6.2022) தலைமைச் செயலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆய்வுக் கூட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் 2022-2023 ஆம் ஆண்டில், பல்வேறு துறைகளில் மாண்புமிகு அமைச்சர்கள் சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட, பொதுப்பணித்துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய 66 அறிவிப்புகளில், நிர்வாக ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டவை, மதிப்பீடு தயார் செய்யும் நிலையில் உள்ளவை, பணி தளம் தேர்வு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளவை ஆகியவற்றின் தற்போதைய நிலைக்குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பணித்தளம் தேர்வு செய்வதில், முடிவு மேற்கொள்ளப்படாத இனங்கள் குறித்து, தலைமைப் பொறியாளர் கவனத்திற்கு எடுத்து சென்று, மாவட்ட ஆட்சியரைத் தொடர்பு கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

மதிப்பீடு தயார் செய்யும்போது, அனைத்துவிதமான தேவைகளையும் கணக்கிட்டு, மதிப்பீடு தயார் செய்ய வேண்டும். அரசாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு, அதிகமான தொகைக்கு திருந்திய நிர்வாக அனுமதி கேட்கக் கூடாது. தவிர்க்க முடியாத சில இனங்களின் மட்டுமே, அதன் அவசியத்தைப் பொறுத்து திருந்திய அனுமதி கேட்கலாம் என்று தெரிவித்தார்.

**பயன்பாட்டுத்துறையிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டவுடன் உடனடியாக DTCP மற்றும் MMDA ஆகியவற்றின் ஒப்புதலை பெற உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.** கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படவேண்டிய இடம், 2 இலட்சம் சதுரடிக்குமேல் இருந்தால், சுற்றுசூழல் அனுமதி பெறவேண்டியது சட்டபூர்வமான விதிமுறை என்பதால், மிகவும் கவனமாக செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

சில கட்டடங்கள் 95% சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டுத்துறைக்கு ஒப்படைக்கப்படாமல் உள்ளது. இதைப்போன்ற கட்டடங்களை தலைமைப் பொறியாளர் ஆய்வு செய்து, பயன்பாட்டுத்துறைக்கு ஒப்படைக்க தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் மேம்பாட்டுத்துறை, மாற்றுத்திறனாளிகள் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு

மேம்பாட்டுத்துறை, சட்டத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை போன்ற அனைத்து பயன்பாட்டுத்துறையின் கட்டுமானப் பணிகளின் நிலைக்குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வரும் இனங்களில் உடனடியாகப் முடிக்கப்படவேண்டும் என்றும், பணித்தளம் கிடைக்கப்பெறாத இனங்கள் தொடர்பாக, தலைமைப் பொறியாளர்களுக்கும் தகவல் தெரிவித்து, மாவட்ட ஆட்சியரை தொடர்பு கொண்டு, உடனடியாக பணித்தளம் தேர்வு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

இந்தாண்டு சட்டப்பேரவையில், அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்து ஆய்வு மேற்கொண்டார். இதுவரை அரசாணை பிறப்பிக்கப்படாத இனங்கள் குறித்து சிறப்பு கவனம் மேற்கொண்டு அரசுக்கு கருத்து அனுப்ப வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. தயானந்த் கட்டாரியா,இ.ஆ.ப., திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் திரு. எல்.ரவிச்சந்திரன், தலைமைக் கட்டிட வடிவமைப்பாளர் திரு. எஸ்.மைக்கேல் மற்றும் திருச்சி மண்டல அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in